பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

...டர்: 6 பிரசோற்பத்தி ஸூ சித்திரை 18 ஸ்ரீ புதன்கிழமை [01—05—1991 UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 148

# ...ரேமா - இராணுவ உயர்பீடம்
# ...கருத்து வேறுபாடு முற்றுகிறது

## ...ஞ்சன் மரணத்துக்குப் பின் சங்கடநிலை

— உதயன் அரசியற் செய்தியாளர் —

கொழும்பு, மே 1

வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கான அணுகு முறை தொடர்பாக ...ங்கா ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் இராணுவத் தலைமைப் பீடத் ...கும் இடையில் கருத்து வேறுபாடு — பெரும் இடைவெளி — ஏற்பட்டி ...பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் செய்தி வெளியாகியிருக்...

...ாதுகாப்புத் துணை அமைச்சராகவிருந்த ரஞ்சன் விஜேரத்னா கொலையுண்ட ...னர் ஜனாதிபதிக்கும் இராணுவத் தலைமை உயர் அதிகாரிகளுக்கும் இடை ...முரண்பாடு அதிகரித்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

...தில் பாதுகாப்பு ... முன்னாள் செய ... ஜனரல் சேபால ... மூலமாகவும் பின் ...மைச்சர் ரஞ்சன் விஜே...ா மூலமாகவும் இராணு...த ஜனாதிபதி பிரேம...ா கட்டுப்படுத்தி இயக்கி...ார்.

...மைச்சர் ரஞ்சன் கொலை ...டதன் பின்னர் இந்தப ...றுப்பை பாதுகாப்பு ...மச்சின் செயலாளர் ...னரல் சிறில் ரணதுங்க...விடம் ஜனாதிபதி பிரேமதாஸா ஒப்படைத்தார். பிரேமதாஸாவின் மனைவி திருமதி ஹேமா பிரேமதாஸாவுக்கு ஜெனரல் சிறில் ரணதுங்க நெருங்கிய உறவினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் ஜெனரல் ரணதுங்க ஜனாதிபதியின் கருத்துகளை இராணுவ உயரதிகாரிகள் மத்தியில் புகுத்தி. அரசின் கருத்துகளுக்கு — நிலைப்பாட்டுக்கு அவர்களை இணங்கச் செய்ய வைப்பதில் ஆளுமை உடையவராக இல்லை என்று குறை கூறப்படுகிறது

இதனால் இராணுவ உயரதிகாரிகள் மத்தியில் ஒரு புழுக்க நிலை தோன்றியிருக்கிறது.

வடக்கு, கிழக்கில் பெரும் யுத்தம் ஒன்றை ஆயுதப்படையினர் எதிர்நோக்கி, கடும் சண்டை புரிந்து வரும் இவ் வேளையில் —

பொதுமக்கள் மத்தியில் ஜனாதிபதி ''எனக்கு ஆயுதத்தில் நம்பிக்கை இல்லை; போரினால் பலன் இல்லை; பேச்சுவார்த்தை மூலமே தீர்வு''—என்று அடிக்கடி பேசி வருவது மேலும் பாது

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஓமந்தை குண்டு வீச்சில் பெண் தலை சிதறிப் பலி!

யாழ்ப்பாணம், மே 1

ஓமந்தைப் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் பொம்மர் நடத்திய குண்டு வீச்சில் பெண் ஒருவர் தலை துண்டிக்கப்பட்டு உயிரிழந்தார். இன்னும் சிலர் காயமடைந்தனர் வீடுகளும் சேதமடைந்தன.

ஓராம் கட்டையடியில் நடந்த குண்டு வீச்சிலேயே திருமதி கந்தையா [52 வயது] என்பவர் உயிரிழந்தார்.

ஓமந்தை பிரதான வீதிப் பகுதியிலும் பொம்மர் குண்டு வீச்சு நடத்தியது. இதில் சிலர் காயமடைந்த போதிலும், அவர்களது விவரம் தெரிய வரவில்லை.

சுமார் 30 நிமிட நேரம் நடந்த இந்தத் தாக்குதலின் போது ஹெலி ஒன்றும் வேட்டுக்களைத் தீர்த்தது.

[ஓ-15]

## வெடிவிபத்துச் சம்பவத்தில் 12 போராளிகள் மரணம்

யாழ்ப்பாணம், மே 1

நேற்றுக் காலை 6.50 மணியளவில் யாழ் நகரை அண்டிய பகுதி ஒன்றில் தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் பன்னிருவர் மரணமடைந்தனர்,

அப்பா [குமாரசிங்கம் சுந்தரலிங்கம்—மயிலிட்டி], தேவதாஸ் லோறன்ஸ் [ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்], பால கிருஷ்ணன் ஸ்ரீதர் [இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்], சுப்பிரமணியம் மதியழகன் [கொட்டடி, யாழ்ப்பாணம்], திருநாவுக்கரசு ரவீந்திரன் [உரும்பிராய் கிழக்கு], கார்த்திகேசு குமார் [நாவலர் வீதி, நல்லூர்], பெரியசாமி நாகேஸ் [புளியங்குளம் வீதி, அரியாலை], செல்வம் காமினி [கொழும்புத்துறை], செல்லின் ஆனந்தராஜ் [குருநகர்] தர்மன் ஸ்ரீபன் (குருநகர்] சிவ பிரகாசம் ஸ்ரீகாந்த் [திருநெல்வேலி, யாழ்ப்பாணம்], ஆறுமுகம் சிவநேசன் [கொக்குவில்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ...ச்சந்தி முரளி



...டத் தெரியாதவள் ...டை சரியில்லை எண்டா ...ம்......! அப்பிடியெல்லே ...க் கதையும் கிடக்கு...!!

## வடக்கு - கிழக்கில் முன்னேறுவதற்கு படைக்கு ஆட்பலம் போதாதாம்!

### இராணுவ அதிகாரிகள் கருத்து

கொழும்பு, மே 1

வடக்கு - கிழக்கு போர் முனையில் படையினரால் முன்னேற முடியாமைக்குக் காரணம் ஆட்பலம் போதாத தேயாகும் என்று முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

''எம்மிடம் ஒரு லட்சம் படையினர் இருந்திருப்பின் இந்தளவுக்கு யாழ்ப்பாணத்தை பிடித்திருப்போம்''— இப்படி ஒரு சிரேஷ்ட அதிகாரி சொன்னார்.

முப்படைகளுக்குப் புதிதாக ஆட்களைச் சேர்ப்பது நத்தை வேகத்தில் இடம்பெறுவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

''படைக்கு புதிதாக சேர்க்கப்படுபவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் காலத்தைக் குறைக்கக் கூடாது அப்படிச் செய்தால் போர்த்திறன் குறைந்து விடும். அக் குறைந்தது ஆறு மாத காலப் பயிற்சியாவது புதிய படையினருக்கு வழங்கப்பட

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சித்தாண்டியில் ஆசிரியர் கைது

யாழ்ப்பாணம், மே. 1

மட்டக்களப்பு மாவட்டம், சித்தாண்டிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆசிரியரான நடராஜா சிவராஜா என்பவரை இராணுவத்தினர் கைது செய்தனர்.

(ஒ)

# அலங்கார ஊர்திகளுடன் பேரணி;
# ...ிற்பகலில் பிரமாண்டமான கூட்டம்

யாழ்ப்பாணம், மே 1

...ாழ்ப்பாணத்தில் இன்று ...பெற இருக்கும் மேதி... பேரணியிலும், கூட்டத்...ம் பல்லாயிரக்கணக்கான ...ள் கலந்து கொள்ள உள்...ர்.

...ாராட்ட காலத்தில் — ...ும் நெருக்கடி மிக்க இவ் ...ளையில் — தமிழீழ மக்கள் ...து உத்வேகத்தையும், விடுதலை உணர்வையும் உலகுக்கு பறைசாற்றும் நாளாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் இன்றைய மேதினம் அமையும்.

### மேதினத்தை ஒட்டி குடாநாடு எழிற்கோலம்

குடாநாட்டின் உள்ளூராட்சி ... மங்களைச் சேர்ந்த ... கும் மக்கள் முதல் நாரப் பகுதிகளில் பல்துறை தொழிலாளர் அரச, தனியார்துறை, வங்கித்துறை ஊழியர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையில் பொதுமக்கள் இன்றைய ... களும் நேற்றுடன் முடிவுற்றிருந்தன. சனசமூக நிலையங்கள் மற்றும் சமூக சேவா பணிகள் பல வகை ஏற்பாடுகளையும் செய்துள்ளன.

இன்றைய மேதினத்தை யொட்டி பல பகுதிகளிலும் பிரமாண்டமான பந்தல்கள், வளைவுகள் அமைக்கப்பட்டு வீதிகள் தோரணங்கள், வண்ணக்கடதாசிகள், மாலைகள், கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு குடாநாடே எழில் நிறைந்து காட்சி தருகிறது.

குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் திரண்டு வரும் உழைக்கும் மக்கள் பேரணியிலும், கூட்டத்தி

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 24 — 3 — 1924

இறப்பு: 12 — 5 — 1990

### அமரர் நவமணி வேலுப்பிள்ளை

அன்பின் உருவமாய், பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் சிகரமாய், குடும்பத்தின் குலவிளக்காய் எம்மை வளர்த்தெடுத்த அம்மாவே, எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட ஒளிவிளக்கே உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;

கணவன், மக்கள் - தமிழ்ச்செல்வி [பிரான்ஸ்], சந்திரமோகன் [பிரான்ஸ்], தயாபரன் [சுவிஸ்]. கலைச்செல்வி [பிரான்ஸ்], வசீகரன் [பிரான்ஸ்], மருமக்கள் [பிரான்ஸ்], பேரப்பிள்ளைகள் [பிரான்ஸ்]

19, சோமசுந்தரம்,
அவெனியூ,
சுண்டிக்குளி

[16641]

## ஆசிரியர்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 1

ஆசிரியர்கள் தத்தமது அதிபர்களை தங்கள் பாடசாலையில் நாளை மறுதினம் (வெள்ளி) காலை 9-30 மணிக்கு சந்தித்து கல்வி அபிவிருத்தித் திட்டத்தை தயார் செய்யும் பணியில் ஈடுபடும்படி பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா கேட்டுள்ளார்.

## சிமெந்து தொழிலாளருக்கு திடீரென சம்பளம் நிறுத்தம்

### சனியன்று இணுவிலில் கூடுவர்

யாழ்ப்பாணம், மே 1

லங்கா சிமெந்து நிறுவனத்தைச் சேர்ந்த துறைமுகத் தொழிலாளர்களுக்கான சகல கொடுப்பனவுகளையும் கடந்த ஏப்ரல் 23 ஆம் திகதி முதல் நிறுத்தி வைக்கும்படி கொழும்பில் உள்ள தலைமையகம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் தவிர்க்கமுடியாத காரணங்களால் இதற்கு முந்திய மாதங்களுக்கான தமது சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளாதவர்களின் கொடுப்பனவுகளையும் நிறுத்தி வைக்கும்படியும் தலைமையகம் அறிவுறுத்தியுள்ளது.

இத் திடீர் நடவடிக்கையினால் துறைமுக ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் சம்பந்தமாக லங்கா சிமெந்து நிறுவன துறைமுகத் தொழிலாளர் சங்கத்தின் அங்கத்தவர்கள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கூடி ஆராயவுள்ளனர். (ஒ-த)

## இனத்தின் மீட்சிக்காக குரல் கொடுக்க அழைப்பு

யாழ்ப்பாணம், மே 1

உரிமை மறுக்கப்பட்ட எமது இனத்தின் மீட்சிக்காகக் குரல் கொடுக்குமாறு, வடமராட்சி ஆசிரியர் ஒன்றியம் ஆசிரியர்களையும் மாணவர்களையும் கேட்டுள்ளது.

ஒன்றியம் மே தினத்தை யொட்டி விடுத்த செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

எமது தேசத்தின் விடுதலைப் போராட்டம் கூர்மையடைந்து வரும் இவ்வேளையில் சிங்கள பௌத்த பேரினவாத அரசின் இன ஒடுக்குமுறைக்கு எதிராக ஒன்று திரண்ட சக்தியாக உலக அரங்கிற்கு எம்மை வெளிப்படுத்திக் காட்ட வேண்டிய இந்த நேரத்தில் வடமராட்சி ஆசிரியர் ஒன்றியம்' இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து மேதின எழுச்சி ஊர்வலத்தில் கலந்து கொள்கின்றது.

வடமராட்சியின் அனைத்துத் தரத்திலான அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் இன்று நடைபெறும் மேதின எழுச்சி ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் — என்று வேண்டப் பட்டுள்ளது. (அ)

## சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், மே 1

வீதியில் கிடந்த துப்பாக்கி ரவையை அடுப்பில் போட்டுப் பார்த்தபோது, அதுவெடித்ததில் சிறுவன் ஒருவன் காயமடைந்தான்.

யாழ். நீராவியடியில் நேற்றுக்காலை 7 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சந்திரா கஜேந்திரன் (வயது 12) என்ற சிறுவனே காயமடைந்தான். (ஒ-15)

## பரீட்சைக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 1

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க உடுப்பிட்டி, பருத்தித்துறைக் கிளைகளால் கல்வி நிர்வாக சேவை வகுப்பு III போட்டிப் பரீட்சைக்கான கருத்தரங்கு இம்மாதம் 4ஆம், 5ஆம் திகதிகளில் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும் என்று சங்க நிர்வாகச் செயலாளர் த. அருணகிரிராசா தெரிவித்தார். (அ)

## அல்லைப்பிட்டி உப தபாலகம் யாழ். நகரில்

தீவுப் பகுதியில் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து அல்லைப்பிட்டி உப தபாலகம் நாளை முதல் யாழ். தபாலகத்தில் தற்காலிகமாக இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## திருமலை நகரில் புயற்காற்று

திருகோணமலை நகரில் பிரெட்ரிக்கோட்டை, சிறிமாபுரம் பகுதிகளில் நேற்று முன்தினம் புயற்காற்று வீசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்போது கடலில் நங்கூரமிட்டிருந்த 24 வள்ளங்கள் இழுபட்டுப் போயின. (ஒ-எ)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா சிவசுப்பிரமணியம்

செல்லையா சிவசுப்பிரமணியம் காலமாகி விட்டார். இவர் இராசராசேஸ்வரியின் அன்புக் கணவரும், லலிதகுமாரியின் அன்புத் தந்தையும், கோண்டாவிலைச் சேர்ந்த ஆறுமுகம் அவர்களின் அன்புத் தம்பியும், இரத்தினத்தின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (30-4-91) தாவடி மயானத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல் :
மனைவி, மகள்

சேச் லேன்,
கொக்குவில்.

[16535]

### ஷாமந்தி பத்மநாதன்

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் கட்டுடையை வசிப்பிடமாகக் கொண்ட பல்கலைக்கழக வர்த்தகப் பிரிவு 3 ஆம் வருட மாணவி செல்வி ஷாமந்தி பத்மநாதன் 30 - 4 - 91 அன்று காலமானார். இவர் பத்மநாதன் காலஞ்சென்ற கனகம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், முரளிதரன், முகுந்தன், சுகந்தி ஆகியோரின் சகோதரியும் இராஜகுலேந்திரா, உஷா ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 1 - 5 - 91 இன்று மாலை 4 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
இ. பத்மநாதன்

கட்டுடை,
மானிப்பாய்.

[16648]

### சத்தியமூர்த்தி பிரசாந்தி

(இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி பம்பலப்பிட்டி பழைய மாணவி யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

அரியாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற சத்தியமூர்த்தி [Supbt, Of Prisons - Jaffna] சந்திரா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வி பிரசாந்தி கொழும்பில் 25 - 4 - 91 இல் காலமானார்.

இவர் சிவகுமார், நந்தகுமார், சிவகாமி, ஆகியோரின் அன்புச் சகோதரியும், உருத்திரேஸ்வரன் விசயேந்திரன் [U K], Dr. கமலா, Dr, மனோரஞ்சிதம், விஜிதராணி, (சட்டத்தரணி) ஆகியோரின் பெறாமகளும், உமாராணி, ரஞ்சிதாதேவி [U K], பொன்மணி, ராசசுந்தரம் (India), கணேசசுந்தரம், சிவசுந்தரம் ஆகியோரின் மருமகளுமாவார்.

ஈமக்கிரியைகள் 27 - 4 - 91 சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
ச. உருத்திரேஸ்வரன்

125/2, ஆனந்தன் வடலி வீதி, (D.O கிளிநொச்சி)
அரியாலை

[16534]

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

### அமைய சுருக்கெழுத்தாளர் (தமிழ்)

அமைய சுருக்கெழுத்தாளர் (தமிழ்) பதவிக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1991.05.31 வரை என்றால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பளம்: ரூபா 83 40 (நாளொன்றுக்கு)

★ இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப் படிகளும் செலுத்தப்படும்.

விண்ணப்பங்களை நேரிலோ அல்லது சுய முகவரியிடப்பட்ட, முத்திரை ஒட்டிய 23 x 10 செ. மீ. அளவுடைய உறைகளை அனுப்பி தபால் மூலமாகவோ இப்பல்கலைக்கழகத்திலுள்ள சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / ஸ்தாபனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

குறித்த திகதியின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும், விவரங்களும் தெளிவாக குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

: பதிவாளர்

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-04-27

[இ-4954]

## யாழ்ப்பாணக் கல்லூரி

வட்டுக்கோட்டை

12 ஆம், 13ஆம் வருட மாணவர்களுக்கான

### முதலாந் தவணைப் பரீட்சை

மே மாதம் 8ஆம் திகதி ஆரம்பமாகும்.

- அதிபர்.

கல்லூரிப் பூங்கா,
வட்டுக்கோட்டை.

[இ-4963]

## இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம்

### இலங்கை அதிபர் சேவை தரம் I, II, III போட்டிப் பரீட்சைக்கான கருத்தரங்கு

கருத்தரங்கு I
இடம்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி
காலம்: 18, 19 - 05 - 1991.

கருத்தரங்கு II
இடம்: அல்வாய் சின்னத்தம்பி வித்தியாசாலை
காலம்: 22 - 05 - 1991.

கருத்தரங்கு III
இடம்: யாழ் வேம்படி மகளிர் கல்லூரி
காலம்: 25, 26, 27, 28 - 05 - 1991.

கருத்தரங்குகளில் கலந்து கொள்ள விரும்பும் ஆசிரியர் 05 - 05 - 91 ஆம் திகதிக்கு முன்னர் எமது கருத்தரங்கு இணைப்பாளர்களிடம் பெயர் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்'

த, மகாசிவம்
பொதுச் செயலாளர்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், [C 4964]

## கண்ணீர் அஞ்சலி

30- 4- 91- அன்று காலமான யாழ். பல்கலைக்கழக மூன்றாம் வருட முகாமைத்துவ மாணவி

### ஷாமந்தி பத்மநாதன்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

இப்படிக்கு
3 ஆம் வருட கலைப்பீட மாணவர்கள்

[16536]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் இடமாற்றம் புதிய திட்டம்

கொழும்பு, மே 1

இம்மாதத்தில் இருந்து புதிய ஆசிரியர் இடமாற்றத் திட்டம் ஒன்று அமுல் நடத்தப்பட விருப்பதாக அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

தற்போது வசிக்கும் பதவித் தரத்திலேயே இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்கள் பணிகளைத் தொடருவர் என்றும் அமைச்சர் சொன்னார். [இ-எ]

## அகதியாக வந்தவரை பாம்பு கடித்தது

யாழ்ப்பாணம், மே 1

அகதியாக வந்தவர் அடைக்கலம் புகுந்த இடத்தில் பாம்புக் கடிக்கு இலக்கானார்.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து வந்த சரவணையைச் சேர்ந்த எ. கோபால் (வயது 43) என்பவருக்கே இக் கதி ஏற்பட்டது. சென். ஜேம்ஸ் மகளிர் கல்லூரியில் தங்கிய போது பாம்பினால் கடியுண்ட இவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். [இ-15]

# மனித உறவுகள் மேம்பட உதவும் தொழிலாளர் கல்வி நெறி

தொழிலாளர் தினமான இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் கல்விநெறி தொடக்க விழா நடைபெறுகிறது. அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

சமூகத்தின் இலக்குக்குரிய மக்கள் தொகுதியில் [Target-Population] தொழிலாளர்கள் பிரதானமானவர்கள்.

நாட்டுமக்களின் பொருளாதார அபிவிருத்தியிலும் தொழில்நுட்ப முன்னேற்றத்திலும், அரசியல் அமைதியிலும் அவர்களின் பங்கு முக்கியமானதென்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் சமூகத்தின் உயர்ந்த சிந்தனை வளர்ச்சிக்கும் செயற்திறனுக்கும் வழிகாட்டும் பல்கலைக் கழகங்கள் அவர்களை உள்வாங்கும் புதிய கல்விச் செயற்பாடுகள் மூலம் சமூகத்தின் மீதான தம் பொறுப்பை மேலும் ஏற்றுக்கொள்ள முடியும். இந்த வகையில் தொழிலாளர் கல்வி முயற்சி சிறப்பானதாகும்.

அரச சார்பான நிறுவனங்களிலும், அரச சார்பற்ற நிறுவனங்களிலும் உள்ள தொழிலாளர்களினதும், விவசாயம், மீன்பிடி, சிறுகைத் தொழில்கள் போன்ற துறைகளில் சுய தொழில் ஈடுபடும் தொழிலாளர்களினதும் அறிவு, திறன் என்பவற்றை உயர்த்துவதன் மூலம் மனித மூளைவள விருத்திக்குப் பங்களிப்புச் செய்யும்.

### பொது இலக்குகள்

குறிக்கோள் கொண்டது தொழிலாளர் கல்விநெறி ஆகும்.

இத்தொழிலாளர் கல்வி பின்வரும் பொது இலக்குகள் கொண்டது.

1. (அ) நாட்டில் பல்வேறு துறைகளிலும் அதிகரித்த உற்பத்தி மூலம் பயன் தரும் வகையில் பங்களிப்புச் செய்வதற்கு தொழிலாளருக்கு உதவுதல்.

(ஆ) தொழிலாளர் தமது வாழ்வில் முன்னேற்றமடைவதற்குத் தேவைப்படும் வல்லமையைத் தனிப்பட்ட முறையில் அதிகரித்துக் கொள்ள உதவுதல்.

2. தமது குடும்பத்தினதும், சமுதாயத்தினதும் ஆரோக்கியத்தைப் பற்றிய உணர்வைப் பெற்றுக்கொள்ளும் வகையில் போதிய அறிவையும், ஒற்ற மனப்பாங்குகளையும் தொழிலாளர்களிடம் வளர்த்தல்.

இதன் மூலம் தொழிற் பிணக்குகள் குறைந்து அமைதி ஏற்பட்டு தொழிலிடங்களில் மனித உறவுகள் மேம்பாட்டையும், நாட்டின் வரலாறு, கலாசார, சமூக விருத்தியின் பின்னணியில் சமூகத்தின் ஓர் அங்கமாகத் தொழிலாளர் செயற்படுவதற்கு உதவி அளித்தல்.

இதன் மூலம் சமூக வளர்ச்சியுடன் தொழிலாளர் தம் பங்கை சரியான முறையில் இணைத்துக் கொள்ள முடியும்.

விவசாயம், மீன்பிடி, சிறுகைத்தொழில் போன்ற துறைகளின் வளர்ச்சியானது விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இணைந்தே செல்ல வேண்டும்; அவ்வாறு அப் பொருளாதாரத் துறைகளில் ஏற்படும் புதிய தொழில்நுட்ப மாற்றங்கள் பற்றிய சமகால அறிவைப் பெறுவதற்குரிய ஆற்றலை வளர்ப்பதன் மூலம் தொழிலகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்படக்கூடிய உராய்வினைத் தவிர்க்க முடியும்.

சான்றிதழ்

இக் கல்வி நெறியானது

**பேராசிரியர் வ. ஆறுமுகம்**

தலைவர், கல்வியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்

3. தொழிற்சங்கங்களின் விருத்தி, அவற்றின் வரலாறு என்பன பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு தொழிலாளர்களுக்கு உதவுதல். இதன் மூலமாக தொழில் சார்ந்தும், நிறுவனமயமான குழுக்கள் தொடர்பாகவும் அவர்களது உரிமைகளையும், பங்குகளையும் உணர்வதற்கு உதவி அளித்தல்.

தொழிலாளர் வேலைப்பளுவைக் கருத்திற் கொண்டு வார இறுதி நாட்களிலேயே நடைபெறும்.

பத்து மாதங்களில் பரந்து செல்லும் இக் கற்கை நெறி இரண்டு பருவங்கள் [Semester] கொண்டதாகவே அமையும்.

ஒவ்வொரு பருவ இறுதியிலும் நடைபெறும் தேர்வின் அடிப்படையில் தொழிலாளர் கல்விச் சான்றிதழ் வழங்கப்படும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற்றுறையின் ஓர் அங்கமாக ஆரம்பிக்கப்படும் இத் தொழிலாளர் கல்வித் திட்ட அலகு காலப் போக்கில் ஒரு தனித்துறையாக வளர்ச்சி பெற வேண்டுமென்ற நம்பிக்கையுணர்வு மலர்ந்துள்ளது.

இதன் வளர்ச்சியானது தொழிலாளர் கல்வி நெறியில் அவர்களை மேலும் உயர் தகைமைகளுக்கு இட்டுச்செல்லும் குறிக்கோள் உடையதாகும்.

இப் புதிய முயற்சியில் இறங்குவதன்மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது தான் இயங்கும் சமுதாயத்துடன் நெருக்கமாக இணைந்து சேவையாற்றும் பணியை மேலும் விசாலித்துள்ளது.

தொழிலாளர் நலனில் அக்கறையுள்ள தொழிற்சங்கங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும், பொதுமக்களும் இம் முயற்சிக்கான உதவிகளையும் நல்லாதரவினையும் வழங்குவதன் மூலம் தொழிலாளர் சமூகம் மேலும் உயர்ச்சியும், மேன்மையும் பெறும் என உறுதியாக நம்ப முடியும். ★ [இ]

யாழ். மாவட்ட

**அரச ஓய்வூதியர் சங்கம்**

02-03-1991 இல் நிறுவப்பட்ட யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கம், உறுப்பினரைச் சேர்க்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. விதவை ஓய்வூதியம் பெறுபவர்களும் இச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளலாம். சங்க உறுப்பினர்களுக்கு ஓர் ''அந்திய கால சகாய நிதி'' ஸ்தாபிப்பதும் சங்கத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்.

விவரங்களுக்கு:

கௌரவ செயலர்,
392, பிரதான வீதி [பஸ்தியன் சந்தி],
யாழ்ப்பாணம்.

[16630]

**அறிவித்தல்**

S.F.D.O.I.M

சகல சுதேச வைத்தியர்களுக்குமான

**கலந்துரையாடல்**

இடம்: யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை அரங்கு - கைதடி

காலம்: 5 5 91 ஞாயிற்றுக்கிழமை காலை 9 00மணி

விடயம்: சுரத்திற்கு அழிக்கப்படும் சிகிச்சை முறைகளும், பாவிக்கப்படும் மூலிகைகளும்

சகல சுதேச வைத்தியர்களும் சுரத்திற்கு தம்மால் மேற்கொள்ளப்படும் சிகிச்சை முறைகளையும் பாவிக்கப்படும் மூலிகைகளையும் இக்கலந்துரையாடலில் முன்வைக்கலாம்.

செயலாளர்

சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கம்,
சித்த வைத்தியர் ..., கைதடி.

[16529]

## சங்கிலி யாருடையது?

யாழ்ப்பாணம், மே 1

யாழ்ப்பாணம் சென். சார்ள்ஸ் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் வீதியில் கண்டெடுத்த தங்கச் சங்கிலி ஒன்றை உதயன் பணிமனையில் ஒப்படைத்துள்ளனர்.

11 ஆம் ஆண்டு மாணவர்களான அவர்களின் நல்ல சிந்தனையையும், முன் மாதிரியையும் பாராட்டுகிறோம்.

சங்கிலியைத் தொலைத்தவர்கள் உரிய அத்தாட்சிகளைத் தெரிவித்து அதனை உதயன் பணிமனையில் அலுவலக நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். [அ]

## தீவுப் பகுதிக்கு கப்பல் மூலம் உணவு அனுப்பக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 1

பட்டினி நிலையில் வாழும் அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவுப் பகுதி மக்களுக்கு கப்பல் மூலம் உணவுப் பொருள்கள் அனுப்ப உடன் நடவடிக்கை எடுக்குமாறு அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் யாழ் செயலக அதிகாரிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 'சிரிமா' கப்பலில் அங்கு அனுப்பப்பட்ட உணவுப் பொருள்கள் முடிவடைந்ததால், பட்டினி நிலை ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறைக்கு வந்த கப்பல்களில், வந்த உணவுப் பொருள்களில் - இந்த தீவுப் பகுதி மக்களுக்கு ஒதுக்கப்பட்ட உணவுப் பொருள்களை அங்கு அனுப்ப போக்குவரத்து வசதி இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக யாழ். பதில் அரச அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் நேற்று கொழும்புக்குத் தொடர்புகொண்டு அத்தியாவசிய சேவைகள் நாயகம் திரு. சரித்தரத்தவத்தையுடன் பேசினார்.

மாற்று ஏற்பாட்டின் கீழ் இப்பகுதிக்கு உணவுப் பொருள்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று அப்போது உறுதி தெரிவிக்கப்பட்டதாக அறியவந்தது. [உ-3]

## படகுச்சேவை இல்லாததால் மக்கள் அகதிகளாகத் திரும்பினர்

நெடுந்தீவு, மே 1

கடந்த பத்து நாட்களாக நெடுந்தீவு உள்ளிட்ட தீவுப் பகுதிகளுக்கான படகுச் சேவைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இப்பகுதிகளுக்குச் செல்லும் பொருட்டு புங்குடுதீவில் தங்கி இருந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் ஊர்காவற்றுறை, புளியங்கூடல் பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளை அடுத்து அகதிகள் நிலையில் யாழ். நகர் திரும்பினர்.

படகுச் சேவைகள் மீண்டும் எப்போது இடம்பெறும் என்று நிச்சயமாகக் கூறமுடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-111]

## அறுவடையான புகையிலை கைவிடப்பட்ட நிலையில்

யாழ்ப்பாணம், மே 1

தீவுப்பகுதியில் அறுவடை செய்யப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான புகையிலை மக்கள் இடம்பெயர்ந்ததால் கவனிப்பாரற்ற நிலையில் விடப்பட்டுள்ளது.

தீவுப்பகுதிகளில் புகையிலை ஏற்கனவே அறுவடை செய்யப்பட்டு அதனைப் பதப்படுத்துவதற்காக அராலித்துறை ஊடாக தென்னங்காய் மட்டைகளும் ஏற்றிவரப்பட்டிருந்தன.

தற்போது, இராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் அவற்றைக் கைவிட்டு வந்துள்ளனர்.

ஏற்கனவே பயிரிடப்பட்டுள்ள வெங்காயம், மிளகாய் போன்ற சிறு தானியங்களும் கட்டாக்காலி மாடுகளினால் அழிந்துபோகும் ஆபத்து உருவாகி வருகிறது.

இடம்பெயர்ந்த மக்கள் தமது கால்நடைகளை அவிழ்த்துவிட்டு வந்துள்ளதே இதற்குக் காரணம். [இ-16]

## குடாநாட்டில் ஊரடங்கு நீக்கம்

யாழ். குடாநாட்டில் கடந்த வியாழன் முதல் அமுல் நடத்தப்பட்டு வந்த ஊரடங்குச்சட்டம் நேற்றுக் காலை 5-00 மணியுடன் நீக்கப்பட்டு விட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

University of Jaffna

Applications will be received by me for the following post from suitable candidates up to 1991 - 05 - 08

**Temporary Demonstrator in Community Medicine**

Note:

If there are no suitable applications with M B B S Degree, applications from A. M. O's will be considered

Salary Scale

Temporary Demonstrator with M B B S. Degree Rs. 3,250/-

Temporary Demonstrator, A. M. O's - Rs. 2,300/-

Applications should be made on the forms available from the office of the Senior Assistant Registrar / Establishments of this University.

Request for application forms should be accompanied by a self addressed stamped envelope of 23 x 10 c m. in size.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of such Institutions.

REGISTRAR.

University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
1991-04-25

[C-4951]

உள்ளூரில் விளையும் சோயா, உழுந்து அரிசியிலிருந்து தயாரிக்கப்பட்டது.

★ ஜீவாகாரம் ★

குழந்தைகளுக்கு 4 ஆவது மாதத்திலிருந்து ஊட்டுவதற்கேற்றது.

100 கி மாவில் 16. 5 கி. புரதமும், 400 கி. கலோரி சக்தியும் அடங்கியுள்ளன.

மேலும் இதில் உடம்பிற்குத் தேவையான விட்டமின்களும், மினறல்களும் அடங்கியுள்ளன.

பெற்றுக் கொள்ள:

அண்ணா கோப்பிக்கடை,
யாழ்ப்பாணம்.

[சி-4909]

கம்பியூட்டர் பயிற்சி

BASIC Programming Course
With Ms-Dos Operating System
START ON: 04 — 05 — 1991 (4-p m.)

✶ d BASE III + Course பதிவுகளும் நடைபெறும்.

★ Spoken English Course உம் நடைபெறும்.

I. D. P.
Computer Center
Manipay Road, Manipay.

[மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு சமீபமாக உள்ள மேல்மாடி]

[சி-4908]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## ஆங்கில வகுப்புகள்

ஆங்கில மொழியை கசடறக் கற்க விரும்பும் மாணவர்களுக்கு அவரவர்களின் தராதரத்திற்கேற்பவும், வசதிகளுக்கேற்பவும் குறைந்த கட்டணத்தில் கூடிய விளக்கத்துடன் கற்பிக்கப்படுகிறது. By Manjula Balasingam 21/2, அம்மன் வீதி, சந்நதி மடம், யாழ்ப்பாணம். [16527]

## ராகு கேது மாற்றம்

புத்தாண்டுப் பலன்கள் எங்கும் விற்பனையாகின்றன. 15-05-1991 முதல் குரு செவ்வாய் இயசேர்க்கையால் 15-08-1991 வியாழன் மாதம் வரை யுத்தம் தொடரும். நாடுகளுக்கும், ஜோதிடர்களுக்கும், ஜாதகங்களின் கணிப்புகளுக்கும் Prof: சந்திரகாசலிங்கம்ஸ் சித்தன்கேணி. [16630]

## தவறிவிட்டது

29-4-91 இல் வடக்கு பண்ணையில் வள்ளத்திலிருந்து இறங்கும்போது பிரயாணப்பை தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து க. செ. கணபதிப்பிள்ளை & சன்ஸ், மருந்து சரக்கு வியாபாரம் 51, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [40451]

## A/L இரசாயனம்

A/L 92 Inorganic ஆரம்பம் 2-5-91 வியாழன் 6-30 a m ஆசிரியர் சதீஸ், 108, Brown Road, யாழ்ப்பாணம். [16636]

## மணமக்கள் தேவை

சுவீடன், லண்டன் அமெரிக்கா ஆகிய இடங்களில் கடமையாற்றும் எஞ்ஜினியர்கள், டாக்டர்கள், கணக்காளர் ஆகியோரது ஜாதகங்கள் உள்ளன. வாடிக்கைக்காரரின் மனோரதம் நிறைவுறும் வகையில் ஆவண செய்யப்படும். தொடர்பு: எஸ். ஏ. தர்மலிங்கம் 24, புறாடி லேன், கச்சேரி கிழக்கு யாழ்ப்பாணம். [16624]

வெளிவந்து விட்டது
வேகமாக விற்பனையாகின்றது

### இலங்கை அதிபர்கள் சேவை (S. L. P. S - I, II, III)

போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டி

★ கிரகித்தல், ★ பொது அறிவு, ★ கல்விக்கொள்கையும், திருவாசகமும்

## அஸ்ரன் வெளியீடு

விலை ரூபா 115/-

எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம். [சி/4842]

## எழுத்தாளர் தேவை

தமிழ் நாவல் இலக்கியத்தில் ஆர்வமுள்ள எழுத்தாளர்கள் தேவை. நேரடியாக ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நாவல்களை இலக்கியத் தரம் குன்றாது திருத்தி எழுதுவதற்கு தமிழ் எழுத்தாளர் தேவைப்படுகிறார்கள்.

நேரடித் தேர்வுக்கு 12-5-91 ஞாயிற்றுக்கிழமை தங்கள் தகுதிக்கான சகல ஆவணங்களுடன் கீழ்வரும் முகவரிக்கு சமுகந்தரவும்.

### சோழன் பதிப்பகம்

கு. மோகன், தர்ஷினி இல்லம்,
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
[16638]

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

### விவசாயபீடம் பரீட்சை - 1990

விவசாய பீட முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை 13-05-1991இல் கிளிநொச்சி விவசாய பீடத்தில் நடைபெறும்.

- பதிவாளர்

[சி-4957]

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இலங்கை.

### 1990 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் கல்வியாண்டு பரீட்சைகள்

கலை / வர்த்தகம் / முகாமைத்துவம்

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்த சகல வருட மாணவர்களும் 30-5-1991 இற்கு முன்பாக யாழ். பல்கலைக்கழகம், பரீட்சைக் கிளையில் விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மீள் பரீட்சார்த்திகள் தகுந்த கட்டண பற்றுச்சீட்டுடன் தமது விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க வேண்டும். இக்குறிப்பிட்ட திகதிக்குப் பின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

- பதிவாளர்

[சி-4956]

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் திதியும்



அமரர்

### செல்லத்துரை வரதலிங்கம்

[இளைப்பாறிய அதிபர் யாழ் / வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், முன்னாள்:- யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளர்; தீவுப் பகுதி செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி; தீவுப் பகுதி கால்நடை வளர்ப்போர் சங்கச் செயலாளர்]

மலர்வு: 25 - 09 - 1929

உதிர்வு: 12 - 05 - 1990

திதி: 01 - 05 - 1991

எங்கள் குடும்பத் தலைவர் எதிர்பாராத வேளையில் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவே எம்மை வழிநடத்திக் கொண்டிருக்கும் என்ற நம்பிக்கையுடன், ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்.

உங்கள் குடும்பத்தினர்.

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.
[16631]

## மிளகாய், பயறு மற்றும் பயிர்களைத் தாக்கும் குருமன் நோய் பீடைகளை ஒழிக்க உதவுகிறது.

### நீமியா உரம்

பயிருக்கும் ஊட்டம் அளிக்கிறது.
1000 கன்றுத் தறைக்குப் பாவிக்க

1. தெளிப்பதற்கு முதல் நாளே 15 கிலோ நீமியாவை 25 லீற்றர் நீரில் ஊறவைக்க வேண்டும்.
2. தெளிக்கும் தினத்தில் கரைசலை வடிகட்டிக் கொண்டு மேலும் நூறு லீற்றர் நீரையும் 2 கிலோ சலவைப் பவுடரையும் கலந்து தெளிப்பானால் தெளிக்க வேண்டும்.

நிலப்பரப்பிற்கு அமைவாக அளவில் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

### மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

[சி-4958]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 03 — 06 — 1969



தாயக மண்ணில் 01 — 05 — 1989

என்றும் வாடாத அன்புமலர்

### செல்வன் தணிகாசலம் ஜெகேசன்

[லெப்டினன்ட் ரம்போ]

ஜெயா!

எமது செல்வமே நீர் எங்களைப் பிரிந்து ஆண்டு இரண்டு சென்றாலும் எமக்கு இது ஒரு கனவு தான். உமது செல்லப் பேச்சும், சிரிப்பும், அம்மா என்ற அன்புக் குரலும் எங்கள் உள்ளங்களில் நிறைந்து நினைவாகி விட்டது.

உமது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

குடும்பத்தினர், அன்புக்குரியவர்கள்.

பத்திரகாளி கோவில் வீதி,
பருத்தித்துறை.
[16643]

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 05 - 07 - 1950

விண்ணில்: 0 - 05 - 1977

### அமரர் குமாரையா தேவராஜன்

[உதவி முகாமையாளர், விற்பனைத் திணைக்களம்]

ஆண்டுகள் பதினான்கு ஆகியும்
எங்கள் அருமை தெய்வமே
உமது மறைவினை ஓர் நிஜம் என இன்னமும்
நம்ப மறுக்கும் எமது இதயங்களில்
என்றென்றும் நிலைத்திருந்து நல் வழி காட்ட
வேண்டுகிறோம்.

உமது ஆன்மா சாந்தி அடைய தினம்
இறைவனை வேண்டிநிற்கும்
அன்பின்
குடும்பத்தினர்கள்

20/6 ..மாதா கோவில் ஒழுங்கை,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
[16637]

## யாழ். மாவட்ட ஓய்வூதியர் சங்கம்

யாழ்ப்பாணம், மே 1

யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு அதன் தலைவராக திரு: அ வி. அ: ஜெ. விஜயரத்தினம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

"அந்தியகால சகாயநிதி" ஒன்றை ஏற்படுத்துவது சங்கத்தின் நோக்கங்களில் ஒன்று என்று தெரிவிக்கப்படுகிறது. [இ]

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1991 மே 31 வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்:

**பதவிகள்:**

1. போதனாசிரியர் - தரம் 111 கர்நாடக வாய்ப்பாட்டு / வீணை / வயலின்.

**சம்பள அளவுத்திட்டம்:**

ரூ 8000-6x80-3480/- [மாதம் ஒன்றிற்கு]

**பதவிகள்:**

2. தற்காலிக போதனாசிரியர். கர்நாடக வாய்ப்பாட்டு / வீணை / வயலின்.

**சம்பள அளவுத் திட்டம்:**

ரூ 300/-[நிலையானது] [மாதமொன்றிற்கு]

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களும் விபரங்களும் இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தாபனங்கள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மேற் குறித்த பதவிகளுக்குரிய விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப் பெற்ற 23 x 10 ச மீ. அளவுடைய தபாலுறை அனுப்பப்பட வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

போதனாசிரியர் தரம் 111க்கான பதவிக்கு தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
26-04-1991.
[சி-4953]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மே தினம் உணர்த்துவது...

சர்வதேசத் தொழிலாளர் நாளான மே தினம் இன்றாகும். அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த, அடிமைப்படுத்தப்பட்டிருந்த, முதலாளிகள் சுரண்டியிருந்த தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடி, இரத்தம் சிந்தி, வெற்றி கண்டதை நினைவுபடுத்தும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நாள் இதுவாகும்.

எட்டு மணி நேர வேலை உரிமைக்கு வித்திட்ட மே தினம் கண்டு நூறாண்டுகள் கழிந்துவிட்டன. இந்த இடைவெளியில், உலகத் தொழிலாளர்கள், தேசத்துக்குத் தேசம் பல போராட்டங்களை நடத்தி, தமக்குப் பல உரிமைகளை வென்றெடுத்திருக்கிறார்கள். பல நாடுகளில் தொழிலாளர் சார்பு அரசாங்கங்களே உருவாகியதும் உண்டு.

நிலைமையில் எத்தளவு முன்னேற்றம் கண்டுவிட்ட போதிலும், உலகின் எட்டுத் திசைகளிலும் உள்ள உழைக்கும் மக்கள் சகலரும் பூரண உரிமைகளுடனும், வசதிகளுடனும் வாழ்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. முதலாளித்துவ முறை மேலோங்கி உள்ள பல நாடுகளில் தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காகப் பலவித போராட்டங்களை நடத்திக்கொண்டே இருக்கிறார்கள்.

ஆகவே, உலகம் எவ்வளவு துரிதமாக முன்னேறி வந்தாலும், விஞ்ஞான வளர்ச்சியால் என்னென்ன புதிய வாழ்க்கை வசதிகளை உருவாக்கினாலும் உழைக்கும் தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும் நிலை தொடர்ந்து கொண்டே இருக்கும் என்றே எண்ணத் தோன்றுகிறது!

எனவே மே தினம் மனித சமுதாயம் வாழும் வரை தொழிலாளர்களின் உரிமை உணர்வையும், அடக்கு முறைக்கு எதிரான எழுச்சியையும் நினைவுபடுத்தும் நாளாகத் தொடரும் எனச் சொல்லலாம்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் மே தினம் அவர்களுக்கு இருவகைகளில் முக்கியத்துவம் வாய்ந்தது எனலாம். அரசியல் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தமிழினத்துக்கு மக்கள் எழுச்சியின் அவசியத்தை, அதன் மகத்தான சக்தியை உணர்த்தும் உதாரண நாளாக விளங்குகிறது மே தினம். உழைக்கும் மக்களின் வெகுசன சக்தி விடுதலைப் போராட்டத்துக்கு அவசியமானது, அத்தியாவசியமானது என்பதையும் மே தினம் தமிழ் மக்களுக்கு எடுத்தோதுகிறது.

உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் போராட்டத்தைத் தொடங்கி விட்டால், என்ன இடர்வரினும், உயிரையே துறக்க நேரினும், முன் வைத்த காலைப் பின் வைக்கக் கூடாது.

எனவே இன்றைய மே தினம், விடுதலைக்கான புதிய உத்வேகத்தையும், எழுச்சியையும் ஈழத்தமிழர் மனங்களில் ஆழ விதைக்க வேண்டும். எத்தகைய கஷ்டங்களை அனுபவிக்க நேரினும் உரிமைப் போராட்டத்தில் இருந்து சறுக்கிப் போகவோ அல்லது சலிப்புக் கொள்ளவோ முனையாமல் மன உறுதியை மேலும் திடமாக்கிக் கொள்ள வேண்டும். சகல தர உழைக்கும் மக்களினதும் பங்களிப்பும், ஆதரவும் விடுதலைப் போராட்டத்துக்கு இன்றியமையாதவை என்பதையும் மே தினம் உணர்த்தி நிற்கிறது.

# நினைத்தவுடன் எந்த இடத்திலும் தாக்கும் வல்லமை புலிகளுக்கு!

## நானாட்டான் சம்பவம் குறித்து பி.பி.சி. செய்தியாளர்

கொழும்பு, மே 1

தாம் நினைத்தவுடன் எந்த இடத்திலும் தாக்குதல் நடத்தக்கூடிய வல்லமையுடன் விடுதலைப் புலிகள் இருக்கிறார்கள்.

நானாட்டானில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 60 அரசப்படைகள் கொல்லப்பட்ட சம்பவம் பற்றிய தனது விமர்சனத்தில் பி.பி.சியின் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ்தோபர் மொரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிறிஸ்தோபர் மொரிஸ் தெரிவித்ததாவது:

அடர்ந்த காட்டினுள் நானாட்டான் தாக்குதல் நடத்தப்பட்டது. இரண்டு பிளாட்டூன் படையினர்மீது விடுதலைப் புலிகள் மூன்று கோணங்களில் இருந்து இந்த தாக்குதல் நடத்தினர்.

அத்தாக்குதலின்போது 45 படையினர் கொல்லப்பட்டனர் என்றும், ஆறு சிப்பாய்கள் மட்டுமே தப்பி முகாம் திரும்பினர் என்றும் அரச தரப்பில் கூறப்படுகிறது.

இந்த ஆண்டின் ஆரம்பத்திலும் அதே மாதிரியான தாக்குதல் ஒன்று இப்பகுதியில் இருந்து சிறிது தொலைவில் புலிகளால் நடத்தப்பட்டது.

இப்பகுதியில் அரச படையினர் சமீபத்தில் பெரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். அதனைத் தொடர்ந்து இப்பகுதி தமது கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதாக படையினர் கூறிக்கொண்டனர்.

ஆனால் கடந்த திங்கள் காலை நானாட்டானில் இடம்பெற்ற தாக்குதல், விடுதலைப் புலிகள் தம் நினைத்தவுடன் எந்த இடத்திலும் தாக்குதல் நடத்தக்கூடிய வல்லமையுடன் இருக்கிறார்கள் என்பதைத் தெரியப்படுத்தி உள்ளது.

கவசவாகனங்கள் மற்றும் ஆயுதங்களுடன் அரசப்படையினர் அப்பகுதியில் நடைரோந்தில் ஈடுபடவேண்டியுள்ளனர். அதனால் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் திடீர் கெரில்லாத் தாக்குதலுக்கு அவர்கள் ஆளாக வேண்டியுள்ளது. இத் தாக்குதல் முறையில் விடுதலைப் புலிகள் கைதேர்ந்தவர்கள்.

வடக்கு — கிழக்குப் போர் முனையில் சீனாவில் இருந்து வாங்கப்பட்ட புதிய ரக ஆயுதங்களையும் படையினர் தற்போது பாவித்துவருகின்றனர்.

ஆனாலும் புதிய ஆயுதங்களைப் பாவித்தும் போர் முனையில் படையினரால் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காணமுடியாதுள்ளது.

வன்முறைகள் இன்னும் தொடரும் அறிகுறிகள் தான் தென்படுகின்றன.

இந்த ஆண்டு நடு பகுதி வரை விதிக்கப்பட்டுள்ள காலக்கெடு அட்டவணைக்கிணங்கவே ஆயுதப் படையினர் செயற்படுகின்றனர்.

காலக்கெடு முடிவடையும் போது வடக்கு-கிழக்கு இராணுவ நடவடிக்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காணவேண்டும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

ஆகவே இராணுவ நடவடிக்கை குறையும் என்று எதிர்பார்க்க முடியாது.

இப்படி பி.பி.சி. செய்தியாளர் தெரிவித்தார். [இ-எ]

## உணவு, உடை உதவ அவசர வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 1

தீவுப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களுக்கு வழங்குவதற்கு உணவுப் பொருள்கள், உடுபுடவைகள், சமையல் பாத்திரங்கள் ஆகியன தந்து உதவுமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த இரண்டு தினங்களாக உங்கள் ஆதரவுடன் பல்லாயிரக் கணக்கான மக்களது உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளோம். முதல் இரண்டு நாட்களிலும் இவர்களின் உடனடித் தேவையாக அமைந்தது தொடர்ந்து உணவு வகைகள், புடைவைகள், சமையல் பாத்திரங்கள் ஆகியவை தேவைப்படுகின்றன. எனவே தேவையின் முக்கியத்துவத்தை உணர்ந்து பொதுமக்கள் தங்களது ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் வழங்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்—என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் விடுத்துள்ள அவசர வேண்டுகோள் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ]

## கட்சிக்கு புதிய பெயர்

முன்னாள் மாநில அமைச்சர் திருநாவுக்கரசு தமது தலைமையிலான அ.தி.மு.க 2-கட்சிக்கு 'அண்ணா புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் முன்னேற்றக்கழகம்' என்ற புதிய பெயரைச் சூட்டியுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

## 4 மீனவரை காணவில்லை

கொழும்பு, மே. 1

மட்டக்களப்பு - முகத்துவாரத்தில் இருந்து கடந்த 21 ஆம் திகதி இயந்திரப் படகில் மீன்பிடிக்கச் சென்ற தம்பையா உதயகுமார், மாணிக்கம் நல்லையா, மோகனதாஸ், கா. துரைசாமி ஆகிய நான்கு மீனவர்களைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## ஆணையாளர் கோரிக்கை

நல்லூர் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்டவர்கள் தமது சோலைவரி நிலுவைகளையும், மின்சாரக் கட்டண நிலுவைகளையும் விரைவில் செலுத்துமாறு நல்லூர் பிரதேச சபை விசேஷ ஆணையாளர் கேட்டுள்ளார்.

கடந்த வருடம் வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமானதைத் தொடர்ந்து வடபகுதிக்கான மின்சாரம் பாதிப்படைந்து துண்டிக்கப்பட்டது.

அதன் பின்னர் இன்னமும் மின்சாரம் மீளக்கிடைக்காததால் பொதுமக்கள் தமது மின்வரி நிலுவைகளை இதுவரை செலுத்தாமல் உள்ளனர்.

மின்சாரம் மீளக்கிடைக்கும் பட்சத்தில் வரி நிலுவைகளை ஒரேயடியாகச் செலுத்துவதைத் தவிர்த்து இப்போதே செலுத்துவதால் மக்கள் நன்மையடைய முடியும் என ஆணையாளர் தெரிவித்தார்.

## பணிமனையில் சமுகம் அளிக்க கோரிக்கை

உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ்ப்பாணப் பணிமனையில் கடமையாற்றி கடந்த ஜனவரி 1 ஆம் திகதி இளைப்பாறிய ஊழியர்கள் அனைவரையும் நாளை 2 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு சந்தோர் பணிமனையில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

# ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலைக்கு வித்திட்ட மேதினம்

— பிங்கலன் —

உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர்களால் இன்று மேதினம் கொண்டாடப்படுகின்றது. மேதினம் என்பது தொழிலாளர்களின் மகத்தான ஒரு திருநாள். தொழிலாளர் வர்க்கத்தின் சுதந்திர உணர்வுகளை உலகுக்கு உணர்த்திய நன் நாள்.

தமது வர்க்கத்தின் உரிமைகளை நிலைநாட்ட அவர்கள் தம் இன்னுயிரையும் இழக்க முன்வந்த நாள் இம் மே திருநாள். தொழிலாளர்கள் மட்டுமல்லர், உலகில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை உணர்வுக்கும் ஒர் உந்து சக்தியாக இருப்பதும் மேதினம் தான்.

உழைப்பவர் ஒரு வர்க்கம், அதை அனுபவிப்பவர் ஒரு வர்க்கம் என்று இருந்த 18 ஆம் நூற்றாண்டில் தொழிலாளர்களின் உழைப்பில் முதலாளிகள் தங்கள் பணப்பெட்டிகளை நிரப்பிக் கொண்டனர். முதலாளித்துவ வர்க்கம் உல்லாச வாழ்க்கையில் மிதந்தது. ஆனால் தொழிலாளர் வர்க்கமோ, அரைப்பட்டினி நிலையே யதார்த்தம் என்ற நிலையில் இருந்தது. அடிப்படை உரிமைகள் கூட இன்றி, உழைக்கும் இயந்திரங்களாகவே தொழிலாளர்கள் கருதப்பட்ட நாட்கள் அவை.

சுகாதார வசதிகள், வசதியான வாழ்விடங்கள் விபத்து நட்ட ஈடுகள் போன்ற எந்த தொழிலாளர் [illegible] பேணும் உரிமைகளுமின்றி அவர்கள் வாடினர். உழைப்புக்கேற்ற ஊதியம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. ஆனால் அதிகளவில் அவர்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டது.

எனினும் அடக்கு முறைகளால் விடுதலை உணர்வுகளை மழுங்கடிக்க முடியாது என்பது மே தினத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டது. முதலாளி வர்க்கத்தின் அடக்கு முறைகளை உடைத்தெறியப் புறப்பட்டது தொழிலாளர் வர்க்கம். 8 மணி நேர வேலை, ஊதிய அதிகரிப்பு என்பனவற்றை முன் வைத்து தொழிலாளர்கள் 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் போராட்டங்களைத் தொடங்கினர். பரவலாக வேலை நிறுத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது; வருமானம் பாதிக்கப்பட்டது. அதிகார வெறி பிடித்த முதலாளிகள் வேலை நிறுத்தங்களை முறியடிக்க குறுக்கு வழிகளை நாடினர்.

முதலாளிகளின் நெருக்குதலால் அரசு வேலை நிறுத்தங்களை சட்ட விரோதமாக்கியது. வேலை நிறுத்தம் செய்த ஊழியர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். ஆனால் இந் நடவடிக்கைகள் தொழிலாளர்களின் விடுதலை உணர்வுகளை மழுங்கடிக்கவில்லை. மாறாகத் தூண்டவே செய்தன. [illegible] காரணமாகப் போராட்டங்கள் பரந்து விஸ்தரிக்கப்பட்டன.

அமெரிக்காவில்

1886 மே முதலம் திகதி அமெரிக்காவின் மிகப் பெரிய தொழிற்சாலைகளில் எட்டு மணி நேர வேலைக்கான இயக்கம் தொடங்கப்பட்டது. அமெரிக்காவிலுள்ள 11,562 நிறுவனங்களைச் சேர்ந்த பல லட்சம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். அமெரிக்காவில் இருந்த ஆலைகளின் உற்பத்திகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன.

இதன் விளைவாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களில் அரைப்பங்கினர் 8 மணி நேர வேலை செய்யும் உரிமையைப் பெற்றனர். சனிக்கிழமைகளில் ½ நாள் விடுமுறையும், ஞாயிற்றுக்கிழமைகளில் முழுநாள் விடுமுறையும் வழங்குவது பற்றி கொள்கையளவில் ஒப்புக்கொள்ளப்பட்டது. மே 3ஆம் திகதி சம்பள வெட்டு, பகுதி நேர வேலை போன்றவற்றை எதிர்த்து நடந்த வேலை நிறுத்தத்தில் பொலிஸார் துப்பாக்கித் தாக்குதல் நடத்தினர். இதில் 4 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

இதனைக் கண்டிக்கும் முகமாக மே 4 இல் சிக்காகோவில் நடைபெற்ற கண்டனக் கூட்டம் பொலிஸாரினால் கலைக்கப்பட்டது. இங்கு ஏற்பட்ட அமளிதுமளியில் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர் 200 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். பொலிஸ் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டார். 50க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இதன் காரணமாக 7 தொழிலாளர் தலைவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கெதிராகப் பொய் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது இதற்கு உலகெங்கும் பெரும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இதனையும் பொருட்படுத்தாது அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இதில் இருவரின் மரண தண்டனை பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து நடைபெற்ற கிளர்ச்சிகளால் ஆயுள் தண்டனை பெற்றவர்கள் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

1886 மே 1இல் தொடக்கிய தொழிலாளர்களின் போராட்டம் 1889 இல் பெரும் வெற்றி பெற்றது.

இதனையே 1890 ஆம் ஆண்டு மே 1 ஆம் திகதியிலிருந்து உலகில் உள்ள சகல நாடுகளும் தொழிலாளர் தினமாகக் கொண்டாடி வருகின்றது.

இரண்டு வர்க்கங்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகள் தொழிலாளர்களிடையே ஒரு பெரும் விடுதலை உணர்வை ஏற்படுத்தியதை இம் மேதினம் உணர்த்தி நிற்கின்றது. அதே வேளை எமது நாட்டில் ஒரு இனம் இன்னோர் இனத்தின் உரிமைகளைப் பறித்ததால் தோன்றியுள்ள இவ் இன முரண்பாடுகளும் எமது இனத்தின் தொழிலாளர் மட்டுமன்றி எல்லா மக்களினதும் ஒன்று சேர்ந்த எழுச்சியால் வென்றெடுக்கப்பட இம்மேதினம் கால்கோளாக அமையட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகுக்கு உணர்த்த அணிதிரள அறைகூவல்

யாழ்ப்பாணம், மே 1

தமிழீழக் கலைஞர்கள் தமக்கு எதிரான சகல அடக்கு முறைகளையும் உடைத்தெறிவதற்காக புலிகளின் தலைமையில் போர்க்கோலம் பூண்டு நிற்கிறார்கள் என்பதை இந்த மே தினத்தில் உலகுக்கு உணர்த்துவோம்.

இவ்வாறு மே தினத்தை ஒட்டி விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பிரிவின் சார்பில் அதன் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை விடுத்துள்ள அறிக்கையில் அறைகூவல் விடுத்துள்ளார்.

ஓர் இனம் தன்னைத்தானே ஆளாதபோது அந்த இனத்தின் கலை, கலாசாரம், பண்பாடுகள் மெல்ல மெல்லச் சிதைந்து வழக்கொழிந்து அழிந்து போகும் என்பதைத் தமிழீழத்தில் சிங்களப் பேரினவாத அரசுகள் திட்டமிட்டு நடாத்தும் கலாசாரப் படுகொலைகள் நிரூபித்துக் காட்டுகின்றன.

தமிழீழத்தின் சகல தரப்பினர் போல எழுத்தாளர், கவிஞர், கலைஞர்களும் தமக்கெதிரான சிங்கள பௌத்த மேலாதிக்கவாதிகள் நடத்தும் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராட வேண்டிய நேரமிது: களத்தில் கால் பதித்து நிற்கும் விடுதலைப் புலிகள் கரத்தைப் பலப்படுத்த வேண்டிய காலமிது.

இன்று காலை 9 மணிக்கு மருதனார்மடத்தில் ஆரம்பமாகும் ஊர்வலத்திலும், நல்லூரில் நடைபெறும் பொதுக் கூட்டத்திலும் சகல தமிழீழக் கலைஞர்களையும் கலந்து கொள்ள வருமாறு விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பிரிவினர் அன்புடன் அழைக்கின்றனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ]

# சமாதான தீர்வு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் மிகவும் குறைவு!

கொழும்பு, மே 1

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானத் தீர்வு காணும் வாய்ப்பு அவ்வளவாகத் தென்படவில்லை என்று கொழும்பில் ஏ. எவ். பி. செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிப்பதாவது;-

மே 11 இல் தென்பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற உள்ளது.

''இத் தேர்தல் முடிவடையும் வரை இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் சமாதான பேச்சுக்களை தொடக்காது. அவ்வாறு சமாதானப் பேச்சுக்கள் தொடங்கினால் அது சிங்கள வாக்காளர்களுக்குப் பிடிக்காத ஒன்றாக இருக்கும். அது ஆளும் கட்சிக்குத் தோல்வியையே கொடுக்கும்—என்று இலங்கை அரசு அஞ்சுவதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

எனவேதான் இரு தரப்புமே கடும் போரில் இறங்கியுள்ளன.

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர், தேர்தல் முடிவுகள் அமையும் விதத்தைப் பொறுத்து அரசு விடுதலைப் புலிகளுடன் ஏதாவது ஓர் இணக்கமான சூழ்நிலையை உருவாக்கக் கூடும் என்று அரசு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் —

இந்தியாவில் இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு வரும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக நம்பப்படுவதால், விடுதலைப் புலிகள் இப்பொழுதே ராஜீவ் காந்தியுடன் நல்லிணக்கம் காண முயற்சி செய்து கொண்டுள்ளனர் என்றும் —

இது விடுதலைப் புலிகளுக்கு சாதகமாக அமையக்கூடும் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணப் பகுதியைக் கைப்பற்ற அரசுப் படையினர் கடும் முயற்சி மேற்கொண்ட போதும், விடுதலைப் புலிகளின் கையே அங்கு ஓங்கி இருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் போர்த் திறமையை அரசுப் படைகளால் முறியடிக்க முடியவில்லை'' — இவ்வாறு ஏ. எப். பி. செய்தியாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வீர மரணம்

யாழ்ப்பாணம், மே. 1

நேற்று முன்தினம் பிற்பகல் 1. 30 மணியளவில் ஆனையிறவுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடந்த மோதலில் ஆனந்தன் [பத்மநாதன் கமலநாதன் - பூநகரி] என்ற போராளி வீரமரணமடைந்தார். [உ]

## இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 1

யாழ் பல்கலைக்கழக அனைத்துப் பீடங்களைச் சேர்ந்த சகல மாணவர்களையும் இன்று காலை 8 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தில் ஒன்று கூடுமாறு பல்கலைக் கழக மாணவரவை வேண்டுகோள் விடுத்துள்ளது [ஓ-5]

## மேதின செய்திகள்

யாழ்ப்பாணம், மே 1

சர்வதேச சமூகத்திற்கு எமது இனத்தின் ஒட்டுமொத்தமான ஒருமைப்பாட்டினை தெரியப்படுத்துவதற்காக நடத்தப்படும் மேதின எழுச்சியில் தமிழீழ மக்களுடன் பல்கலைக்கழக சமூகமும் தன்னை இணைத்துக் கொள்கிறது. —என்று யாழ் பல்கலைக்கழக மாணவர் அவை மேதினத்தை ஒட்டி வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத் தெருவில் இயங்கிவரும் நற் சமூக நிலையமும் உழைக்கும் மக்கள் தியாகத்துடன் நடத்திய உரிமைப் போராட்டத்தை நினைவு கூர்ந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

# உரிமைகளை மீட்டெடுக்க போராடச் சித்தமாவோம்

## தெ. ப. கூ. ச. சமாசம் செய்தி

யாழ்ப்பாணம், மே 1

பாட்டாளிகள் அனைவரும் கூட்டாளிகளாகக் கொண்டாடும் இத் தினத்தில் எமது பிரதேச வளங்களை முழுமையாகப் பெறவும், எமது இனத்தின் உரிமைகளை மீட்டெடுக்கவும் செங்குருதி சிந்திப் போராட சித்தமாகவிருப்போம்.

வட மாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் விடுத்துள்ள மே தினச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

தொழிலாளே உயர்வு தாழ்வு இல்லை. தொன்று தொட்டு அடிமைகளாய் யாருமில்லை என இவ் இழிவான நிலைமைகளை நீக்க வழி காண்போம்; வரலாறு படைத்திடுவோம் —

உரிமைக் குரல் எழுப்பும் உத்தமர்கள் வரிசையிலே, ஆற்றல் மிகு சரத்தில் ஆயுதங்கள் ஏந்துவதே மாற்றத்திற்கான வழி; மாற்றுவழி இல்லை என வானதிர முழங்கி அவர்கள் பாதையிற் செல்வோம்; செயல்படுவோம்;— என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ]

# ஊர்காவற்றுறை ராணுவம் நேற்று திடீர் ஷெல் வீச்சு

## யாழ் நகரப் பகுதியும் அதிர்ந்தது

யாழ்ப்பாணம், மே. 1

ஊர்காவற்றுறை இராணுவத்தினர் நேற்று மாலை 4 மணியளவில் திடீரென ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

சரவணை, நாரந்தனை மற்றும் அராலிச் சந்தி, வங்களாவடி பகுதிகளிலும் ஷெல்கள் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஷெல்களின் சத்தம் யாழ். நகரையும் அதிரவைத்தது

இதே வேளை—

புளியங்கூடல் சந்தியை அண்டிய பகுதியிலுள்ள இராணுவத்தினர் நேற்று நண்பகலுக்குப் பின்னர் இடையிடையே துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர் என்று அங்கிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் தெரிவித்தனர். [ஓ 15-125]

# ஸ்ரான்லி வீதியில் தற்காலிக கிளை

# தீவுப்பகுதி மக்களுக்கு நாளை முதல் நிவாரணம்

யாழ்ப்பாணம், மே 1

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கத்தின் தற்காலிகக் கிளை அலுவலகம் ஒன்று யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள மணியம் கட்டடத்தில் திறக்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்துள்ள தீவுப் பகுதி மக்களுக்கான நிவாரணப் பணியை மேற்கொள்ள வசதியாகவே இந்தக் கிளை அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரண உணவுப் பொருள் விநியோகம் நாளை மேற்படி சங்கக் கிளையில் வைத்து வழங்கப்படவுள்ளதாக கிளை முகாமையாளர் தெரிவித்தார். [ஓ-125]

# நாரந்தனை, சரவணையில் நேற்று வீடுகளுக்கு தீவைப்பு

நேற்று நண்பகலுக்குப் பின்னர் நாரந்தனை வடக்கு, சரவணை ஆகிய பகுதிகளிலுள்ள சில வீடுகளை படையினர் தீவைத்து எரித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் திகுத் திக்காக பெரும் சுவாலையுடன் தீ கொழுந்துவிட்டு எரிந்து, கரும் புகை எழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நாரந்தனை, சூரியவத்தை, சரவணைப் பகுதிகளில் ஏற்கனவே பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு விட்டதாகத் தெரியவந்தது.

இதேசமயம்—

கடந்த வாரம் இராணுவத்தினர் முன்னேறியபோது நடத்திய சுற்றிவளைப்புக்குள் நாரந்தனை, சரவணைப் பகுதிகளில் முப்பதுக்கும் அதிகமான பொதுமக்கள் சிக்குண்டு இருப்பதாக அவர்களது உறவினர்கள் மூலம் அறியவந்துள்ளது. [ஓ-12[5

# தலையில்லாத சடலங்கள் மண்டூர் பாலத்தடியில்!

யாழ்ப்பாணம், மே, 1

கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டம், மண்டூரிலுள்ள இராணுவத்தினர் ஆனைகட்டியவெளி, காக்காச்சிவெட்டை, நெடிய வெட்டை, ஆகிய பகுதிகளைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

தேடுதலின் பின்னர் இப்பகுதிகளில் இருந்து நான்கு பொதுமக்களைப் படையினர் கைது செய்து கூட்டிச் சென்றனர் என்றும்—

கைதான இருவரின் சடலங்கள் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் அன்றிரவு மண்டூர் பாலத்தடியில் போடப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## கிளைமோர் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே. 1

கடந்த திங்களன்று காலை 9.15 மணியளவில் கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமிலிருந்து மண்முனைத் துறைக்கு ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது மகிழடித்தீவுப் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் கிளைமோர் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலினால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை. [உ]

## வடக்கு-கிழக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டும். அதன் பின்னர் தான் அவர்களை போர் முனைக்கு அனுப்பலாம்.

இராணுவத்தில் ஒரு வருட அனுபவம் பெற்றவரால்தான் உண்மையான சிப்பாயாக விளங்க முடியும்'' — என்று பாதுகாப்பு அதிகாரி ஒருவர் சொன்னார். [அ-எ]

## ஜனாதிபதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி ]

காப்புப் படை அதிகாரிகள் மத்தியில் அதிருப்தியை வளர்த்திருக்கிறது.

வடக்கு, கிழக்கு யுத்தத்தில் முன்னேற்றத்தைக் காட்டுவதற்கு இராணுவத்துக்கு ஜனாதிபதி காலக்கெடு விதித்திருப்பது—

படையின் ஆட்பலத்தை வேகமாகப் பெருக்கவும், மேலதிகமாக ஆயுதங்கள் மற்றும் இராணுவ தளபாடங்களை வாங்கவும் பொருளாதார நெருக்கடிகளைக் காட்டி முட்டுக்கட்டை போடுவதும்—படை அதிகாரிகள் மட்டத்தில் கசப்புணர்வை ஏற்படுத்தியிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஆனாலும் இத்தகைய நிலை ஜனாதிபதிக்கு எதிராக இராணுவ உயரதிகாரிகள் அணிதிரளும் நிலையை உருவாக்காது என்று திடமாக நம்பப்படுவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. [அ-உ]

## சூறாவளிக்கு 700பேர் பலி

டாக்கா, மே 1

பங்காளாதேஷில் வீசிய கடும் சூறாவளியினால் 700 பேர் வரையில் பலியானதாக அறிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களின் சரியான எண்ணிக்கை இன்னும் கணக்கெடுக்கப்படவில்லை.

இந்த எண்ணிக்கை அதிகரிக்கும் வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-5]

## அலங்கார...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லும் பங்குபற்றித் தமது பங்களிப்பைச் செலுத்துவர்.

இன்று காலை 9 மணிக்கு மருதனார்மடத்தில் இருந்து ஆரம்பிக்கும் பேரணி, நல்லூரை வந்தடையும்.

பேரணியில் தமிழ் மக்கள் அடக்கு முறைகளுக்கும், அட்டூழியங்களுக்கும் உட்படுத்தப்பட்டிருப்பதைச் சித்திரிக்கும் ஊர்திகளும், தமிழ் பிரதேசங்களின் தொழில்களையும், வளங்களையும் சிறப்பித்துக் காட்டும் ஊர்திகளும் பவனி வரும்.

நல்லூரில் பிற்பகலில் பிரமாண்டமான மேதினக் கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் உட்படப் பலர் உரையாற்றுவர். (ஓ)

## வெடி விபத்துச் சம்ப...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மேற்கு] ஆகிய போராளிகளே உயிரிழந்தவர்களாவர்.

இந்தப் போராளிகளின் மறைவு குறித்து விடுதலைப் புலிகள் இயக்கம் வீரவணக்கம் தெரிவித்திருக்கிறது.

இந்தச் சம்பவத்தில் பத்துப் பொதுமக்களும் காயமடைந்தனர்.

காரைநகர் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களான ஆனந்தநடராசா மாலினி [வயது 35], அவரது மகள் சுஜாதா [வயது 6], ஆறுமுகம் சத்தியராணி [வயது 16], இராசதுரை விஜிதா [வயது 19] எஸ். மணிவண்ணன் [வயது 14] ஆகியோரும் மற்றும் யாழ். அம்மன் வீதியைச் சேர்ந்த பரமநாதன் இராசா [வயது 60], கடைச்சாமி வீதியைச் சேர்ந்தவர்களான யோகலிங்கம் [வயது 38]. ஸ்ரீகாந்தராசா ரதிதேவி [வயது 40], கவிதா [வயது 13]. திருமதி தேவன் இளங்கோ [வயது 38] ஆகியோரே காயமடைந்தவர்களாவர். [உ-15]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 01 - 05 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org